# 2

# ஆண்கள் தேவை

***வேதபாடப் பகுதி:*** *எசேக்கியேல் 22:30.*

*நமது முந்திய பாடத்தில் நாம், பொதுவாக குடும்பத்தின் அறைகூவல்களில் சிலவற்றைச் சுருக்கமாக அறிமுகப்படுத்தினோம். இந்தப் பாடத்தில் நாம், கணவர்கள் மற்றும் தந்தையர்கள் ஆகியோரின் பொறுப்புகளைப் பற்றிக் குறிப்பாகக் கலந்துரையாடுவோம்; அடுத்த பாடத்தில் நாம், மனைவிகள் மற்றும் தாய்மார்கள் ஆகியோரைப் பற்றி பேசுவோம்.*

நீண்டகாலத்திற்கு முன்பு தேவன், "நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்" என்று கூறினார் (எசேக்கியேல் 22:30). இஸ்ரவேல் மக்கள் மாபெரும் பாவம் செய்திருந்தனர், அழிவு உடனடியாக வரக்கூடியதாயிருந்தது. சுவரை அடைக்கத்தக்கதாக, இடைவெளியை நிரப்பத்தக்கதாக ஒரு மனிதனைத் தேடியும், அப்படிப்பட்ட மனிதனைக் கண்டறிய முடியவில்லை என்று தேவன் கூறினார்.[1]

சரியான வகையிலான மனிதர்கள் - தேவபக்தியுள்ள மனிதர்கள், ஒப்புக்கொடுத்தலுள்ள மனிதர்கள், தைரியமுள்ள மனிதர்கள், வெளியே அடியெடுத்து வைத்து நடத்திச்செல்லும் மனிதர்கள் - சமுதாயத்திற்கு மாபெரும் தேவையாக உள்ளனர், ஆனால் பெரும்பாலும் இப்படிப்பட்ட மனிதர்களைக் கண்டறிய முடிவதில்லை. "ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்."

கடந்த நாட்களில் நான், ஆண்களைத் தவிர மற்ற ஒவ்வொருவரையும் மற்றும் ஒவ்வொரு விஷயத்தையும் நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருந்ததாகச் சிலவேளைகளில் காணப்பட்ட சபைகளுடன் ஊழியம் செய்துகொண்டிருந்தேன். நாங்கள் பெண்களுக்கென்று சிறப்புத் திட்டங்களைக் கொண்டிருந்தோம்: வீடுசந்திப்புகளில் பெரும்பாலானவற்றை அவர்களே செய்தனர்; நோயாளிகள்மீது அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டனர்; மேன்மையான மனைவியராகவும் தாய்மார்களாகவும் இருத்தல் எப்படி என்பது பற்றிய சிறப்பு வகுப்புகளில் கலந்துகொண்டனர். நாங்கள் எங்கள் இளைஞர்கள் பற்றி அக்கறை கொண்டு, "அவர்களே நாளைய நடத்துநர்கள்" என்று கூறி அவர்களுக்கு விசேஷ அளிப்புகளைத்தந்தோம். அது உண்மையும் நன்மையுமானதே - ஆனால் இன்றைய நாட்களின் தலைவர்களான ஆண்களின் நிலை என்ன? சபையில் உள்ள ஆண்கள் அக்கினியாய்ப்பற்றி எரிந்து ஆண்டவருக்கென்று ஊழியம் செய்யாதவரையில், அந்த சபைக்குழுமம் மேற்கொள்ளும் ஊழியப் பணித்திட்டம் எதுவும் ஊனப்படுத்தப்படும்.

சமுதாயத்தில், சபையில் மற்றும் நமது குடும்பங்களில் எவ்வகைப்பட்ட ஆண்கள் நமக்குத் தேவை?

## தேவை: கிறிஸ்தவர்களாக - உண்மைக் கிறிஸ்தவர்களாக - இருக்கும் ஆண்கள்

முதலாவது, நமக்கு கிறிஸ்தவர்களாக - உண்மைக் கிறிஸ்தவர்களாக - இருக்கும் ஆண்கள் தேவைப்படுகின்றனர். யாரோ ஒருவர், பரலோகத்தில் கொள்வனையும் கொடுப்பனையும் இருக்காது (மத்தேயு 22:30). ஏனென்றால் போதிய அளவு ஆண்கள் அங்கு செல்லமாட்டார்கள் என்று வேடிக்கையாக குறிப்பிட்டுள்ளார். அது காரணமல்ல, ஆனால் அவர் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை நான் அறிந்துள்ளேன். மாபெரும் பழம்பாடலின் வரியைப் பற்றி "எனது மனைவியை எடுத்துக்கொள்ளும் ஆண்டவரே, அவள் உமக்கென்று பரிசுத்தமாக்கப்படட்டும்"[2] என்று நினைப்பவர்களாய்க் காணப்படுகிற பல கணவர்களை நான் அறிந்துள்ளேன். நான் அறிந்துள்ள ஒரு பிரசங்கியார், சபையில் மிக அதிகமான "மைத்துனர்கள்" இருக்கின்றனர் என்று கருத்துத் தெரிவித்தார். மனைவியர் கிறிஸ்தவர்களாய் இருந்தும் அவர்களின் கணவர்கள் கிறிஸ்தவர்களாய் இராத நிலையைக் குறிப்பிடும் அவருடைய முரணான வழிமுறையாக இது உள்ளது.

நீங்கள் ஒரு ஆணாயிருந்து கிறிஸ்தவராய் இராதிருந்தால், நீங்கள் உடனடியாக கிறிஸ்தவராகும்படி நான் என் முழு பலத்துடன் உங்களை ஊக்குவிக்கின்றேன். அதன்மூலமாக உங்கள் சொந்த ஆத்துமா இரட்சிக்கப்படும் என்பதற்காகவே நான் முதலாவது உங்களை ஊக்குவிக்கின்றேன். வேறு ஒருவருடைய நீதியினிமித்தம் நீங்கள் இரட்சிக்கப்பட முடியாது. "நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" என்று பவுல் வலியுறுத்தினார் (ரோமர் 14:12).

கிறிஸ்தவராய் இல்லாதிருந்து கனவு கண்ட ஒரு ஆணைப் பற்றிய கற்பனைக் கதையொன்று கூறப்பட்டுள்ளது. அவர் அந்தக் கனவில், மரித்து பரலோகத்தின் வாயில் அருகே சென்றார். அவர் உள்ளே நுழைய முயற்சி செய்தபோது, அவரிடத்தில் வாயிற்காவலர் "நீங்கள் யார்?" என்று கேட்டார். அதற்கு அந்த மனிதர், "உங்களுக்கு என் மனைவியைத் தெரியும் என்று நான் நிச்சயமாய் அறிவேன்" என்றார். அவர் அவளது பெயரைக் கொடுத்து, தனது மனைவி சபையில் ஆராதனை செய்தது, வேதாகமத்தைப் படித்தது, ஜெபித்தது, ஊழியம் செய்தது மற்றும் பிறருக்கு உதவியது யாவற்றைப் பற்றியும் கூறினார். அவள் எவ்வளவு நேர்த்தியான கிறிஸ்தவளாய் இருந்தாள் என்பதைப் பற்றியும் அவர் கூறினார். அதற்கு அந்த வாயிற்காவலர், "ஆனால் உங்கள் மனைவி ஒரு நல்ல கிறிஸ்தவ பெண்ணாக இருந்த காரணத்தினால் நீங்கள் பரலோகத்திற்குள் நுழைய முடியாது" என்று கூறினார். அந்த மனிதரோ, "ஆனால் என் மனைவி எனக்காகத்தான் கிறிஸ்தவ வாழ்வை வாழ்ந்தாள், எனக்காகத்தான் அவள் சபைக்குச் சென்றாள்" என்று மறுப்புரை கூறினார். அதற்கு

*அந்த வாயிற்காவலர், "மிக்க நன்று, இப்போது அவள் உங்களுக்காகவே பரலோகம் சென்றிருக்கின்றாள்" என்று கூறினார். உங்கள் ஆத்துமா இரட்சிக்கப்பட வேண்டுமென்றால், நீங்கள் கிறிஸ்தவராக வேண்டும்.*

*நீங்கள் ஒரு தந்தையாக இருந்தால், உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களை இரட்சிப்புக்கு உட்படுத்துவதற்காகவும் நீங்கள் கிறிஸ்தவராக வேண்டும். நீங்கள் உணர்ந்தாலும் இல்லையென்றாலும், ஒரு தந்தை என்ற வகையில் நன்மைக்கோ அல்லது தீமைக்கோ நீங்கள் மாபெரும் செல்வாக்குச் செலுத்துபவர்களாய் இருக்கின்றீர்கள். உங்கள் மனைவி சரியானதைச் செய்ய முயற்சிக்கின்றபோது அவர்களை நீங்கள் நேர்முகமாய் எதிர்க்காதிருக்கலாம் அல்லது அவர்களின் முயற்சிகளுக்குத் தடைசெய்யாமல் இருக்கலாம்; ஆனால் அதைப் புறக்கணிப்பதன் மூல மாக மாத்திரம்கூட, அவர்கள் உங்கள் பிள்ளைகளிடத்தில் கொண்டுள்ள நேர்மறையான செல்வாக்கை உங்களால் ஒன்றுமற்றதாக்கிவிட முடியும். பவுல் தீமோத்தேயுவினிடத்தில், "அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி" என்று கூறிய 2 தீமோத்தேயு 2:2 போன்ற வசனப்பகுதிகள் உட்பட, வேதாகமம் முழுவதிலும் மனிதர்கள் கொண்டுள்ள செல்வாக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.*

*உங்களைப் பற்றியும் உங்கள் குடும்பத்தைப் பற்றியும் நான் அக்கறை கொண்டுள்ளதால், என்னால் இயன்ற அளவுக்குத் தெளிவாக/எளிமை யாகப் பேச விரும்புகின்றேன்; கிறிஸ்து இல்லாமல் நீங்கள் இருக்க வேண்டிய பிரகாரம் இருக்கும் மனிதராவது என்பது ஒருக்காலும் முடியாது. நீங்கள் இருக்கவேண்டிய பிரகாரம் இருக்கும் ஒரு கணவராவது என்பது ஒருக்காலும் முடியாது. நீங்கள் இருக்கவேண்டிய பிரகாரம் இருக்கும் ஒரு தந்தையாவது என்பது ஒருக்காலும் முடியாது. நீங்கள் சரியான வகையான செல்வாக்கை கொண்டிருத்தல் என்பது ஒருக்காலும் முடியாது.*

*பிளேட்டோ[3] என்பவரிடத்தில் ஒருமுறை, "மனிதன் என்பவன் யார்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், "இறக்கைகள் இல்லாத ஒரு இரண்டு கால் விலங்கு"[4] என்று பதில் அளித்தார். விலங்குகள் நான்கு கால்கள் உடையவைகளாகவும் நீங்கள் இரண்டு கால்கள் உடையவராகவும் இருக்கின்றீர்கள் என்ற ஒரே விஷயத்தினால் மாத்திரம் உங்களை விலங்கில் இருந்து வித்தியாசப்படுத்திப் பார்க்கலாமா? பறவைகள் இறக்கைகளைக் கொண்டுள்ளன, உங்களுக்கு இறக்கைகள் இல்லை என்பது மாத்திரமே பறவைகளுக்கும் உங்களுக்கும் உள்ள வித்தியாசமா? நிச்சயமாகவே இல்லை! மாறாக, தேவன் உங்களுக்கு அழிவற்ற ஆத்துமா ஒன்றைக் கொடுத்துள்ளதால் நீங்கள் விலங்குகளைவிட மேம்பட்டவராய் இருக்கிறீர்கள் (பிரசங்கி 12:7). இதை உணர்ந்தறிந்த நிலையில் நீங்கள், உங்கள் ஆத்துமா ஒருநாளில் தேவனுடைய நியாயத்தீர்ப்பை எதிர்கொள்ளும் என்பதை அறிந்தவர்போல் வாழுகின்றீர்களா (வெளிப்படுத்தின விசேஷம் 20:11-15)? நீங்கள் ஒரு கிறிஸ்தவ மனிதராக இல்லாதவரையில் ஒரு மனிதர் இருக்க வேண்டிய பிரகாரம் நீங்கள் இருப்பதென்பது ஒருக்காலும் முடியாது.*

## தேவை: தந்தையர்களாக - உண்மைத் தந்தையர்களாக - இருக்கும் ஆண்கள்

*இரண்டாவது நமக்கு, தந்தையர்களாக, உண்மையான தந்தையர்களாக இருக்கும் ஆண்கள் தேவை. சிலர், "ஆனால் நான் ஒரு தந்தையாக இருக்கின்றேனே" என்று மறுப்புரை கூறலாம். நான் இவ்வார்த்தையை அதன் வேதாகம மறைகருத்துகள் யாவற்றோடும் இங்கு பயன்படுத்துகின்றேன். ஒரு புத்தகத்தை உங்கள் வீட்டில் வைத்திருப்பதால் மாத்திரம் நீங்கள் அதன் எழுத்தாளராகி விடமுடியாது என்பதைப்போன்றே, உங்கள் வீட்டில் ஒரு குழந்தையைப் பெற்றுக்கொள்ளுதல் என்பது மாத்திரம் உங்களை ஒரு உண்மையான தந்தையாக்கிவிடுவதில்லை.*

*தந்தையர்களாக இருப்பவர்கள்மீது வேதாகமம் ஒரு கனத்த பொறுப்பை வைக்கிறது: "பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" (எபேசியர் 6:4). சரியானது என்ன என்பதைப் பிள்ளைகளுக்குப்போதிக்கும் செயலை முன்னின்று நடத்துவதற்குத் தாயே பொறுப்பாளியாய் இருக்கின்றாள் என்று பலர் நம்புகின்றனர், ஆனால் அது அவ்வாறு இருப்பதில்லை. அது தந்தையின் பணியாக உள்ளது. பிள்ளைகள் எப்படி வளர்க்கப்பட்டுள்ளனர் என்பதற்குத் தந்தைதான் முதலாவதாக மற்றும் முந்தினதாகக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.*

*தேவன், "ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்" (ஆதியாகமம் 18:19). ஆபிரகாம் தமது குடும்பத்தில் ஆவிக்குரிய நடத்துநராய் இருப்பார் என்பதில் தேவன் உறுதியான நம்பிக்கையாய் இருந்தார். தேவன் உங்கள்மீதும் அதேவிதமான நம்பிக்கையைக் கொண்டிருக்க முடியுமா?*

*யோசுவா, இஸ்ரவேல் மக்களுக்கு ஆற்றிய தமது மாபெரும் பிரியாவிடை உரையில் பின்வருமாறு கூறினார்:*

> *கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான் (யோசுவா 24:15).*

*யோசுவா தமது வீட்டார் யாவருக்காகவும் பேச முடிந்தது. ஏன்? ஏனென்றால் அவர் ஒரு தந்தை என்ற வகையில் தமது பொறுப்புகளை நிறைவேற்ற மனவிருப்பமாய் இருந்தார்.*

*அவ்வகையிலான தந்தையாக இருப்பதற்குக் காலம் செல்லும். எனது*

*முதல் மகள் பிறந்ததில் இருந்து, எனது பிள்ளைகள் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாய் இருக்கும்படி வளர்ப்பதற்கு எவ்வளவு காலம் அவசியமாய் இருப்பினும் அதை எடுத்துக்கொள்ளுதல் என்பது எனது முதன்மையான நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. தங்கள் குடும்பங்களைப் புறக்கணிக்க வேண்டியிருக்கும் அளவுக்குப் பிறருக்கு உதவிசெய்வதில் மும்முரமாய் இருந்து இவ்விதமாகத் தங்களின் பிள்ளைகளில் ஒருவரை அல்லது பலரை கர்த்தரிடத்தில் இருந்து இழந்துபோன பல பிரசங்கியார்களை நான் அறிந்திருக்கின்றேன். பின்னோக்கிக் காண்கையில், தந்தையாக இருத்தல் என்பது சுலபமல்ல என்று நான் உங்களுக்குக் கூறமுடியும். எந்த ஒரு தந்தையும் தமது பிள்ளைகளுடன் இருப்பதற்கு நேரம் கண்டறிதல் (அல்லது நேரத்தை ஏற்படுத்திக்கொள்ளுதல்) என்பதற்குப் போராடியாக வேண்டும். அந்த நேரம் அத்தியாவசியமானதாக உள்ளது.*

*நீங்கள் பணிமும்முரமாய் இருக்கின்றீர்கள் என்பதை நான் புரிந்துகொள்கின்றேன். சிலநேரங்களில் நீங்கள் உங்கள் வாழ்வானது உங்கள்மீது குவித்துள்ள எல்லாப் பொறுப்புகளினாலும் மூழ்கடிக்கப் பட்டவர்களாய் இருக்கலாம், ஆனால் வெற்றி மற்றும் சாதனை என்ற பலிபீடத்தின்மீது உங்கள் பிள்ளைகளைப் பலியிட்டுவிடாதீர்கள். யூதாஸ் முப்பது வெள்ளிக்காசுகளுக்காகத் தனது கர்த்தரை விற்றுப்போட்டான். அவன் தான் செய்ததை உணர்ந்தறிந்தபோது, "புறப்பட்டுப்போய் நான்றுகொண்டு செத்தான்" (மத்தேயு 27:5ஆ). இன்றைய நாட்களில் பல தந்தையர்கள், ஒரு பெரிய வீட்டிற்காக, ஒரு மேன்மையான காருக்காக, மிக அதிகம் செல்வாக்குள்ள பதவிக்காகத் தங்கள் பிள்ளைகளை விற்றுப் போடுகின்றனர்.[5] அவர்கள் செய்ததைக் கடைசியில் உணர்ந்தறியும்போது அவர்கள் எவ்வாறு உணருவார்கள். இயேசுவினுடைய பழக்கப்பட்ட வார்த்தைகளில் இருந்து தழுவியமைப்பதென்றால், "மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் பிள்ளையை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் பிள்ளை களுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மத்தேயு 16:26ஐக் காணவும்.)*

## தேவை: நடத்துநர்களாக - உண்மையான நடத்துநர்களாக - இருக்கும் ஆண்கள்

*மூன்றாவதாக நமக்கு, நடத்துநர்களாக, உண்மையான நடத்துநர்களாக இருக்கும் ஆண்கள் தேவை. இதன்மூலம் நான் பொதுவாழ்வில் நடத்துநர்களை அர்த்தப்படுத்துகின்றேன் என்று நினைப்பது அவசியமல்ல. மாறாக, பொதுவாழ்வோ அல்லது தனிவாழ்வோ, எதுவா-யிருப்பினும், ஆவிக்குரிய விஷயங்களில் நடத்திச் செல்லுதல் என்பதில் மனவிருப்பமாக உள்ள ஆண்கள் நமக்கு தேவை.*

*ஆண்கள் நடத்திச் செல்வதை மேற்கொள்ள வேண்டும் என்று தேவன் நியமித்திருக்கின்றார். மூப்பர்கள் அல்லது ஆயர்கள் என்பவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் குறிப்பிட்ட தகுதிகளைக் கொடுத்துள்ளார்; அந்தத்*

தகுதிகள் ஆண்களுக்கு மாத்திரமே வரையறுக்கப்பட்டுள்ளன (1 தீமோத்தேயு 3:2; தீத்து 1:6). சபையில் பொதுவான ஆராதனை ஊழியத்தைப் பற்றி வேதாகமம் பேசுகின்றபோது, பெண்கள் "அமைதியாய் இருக்க வேண்டும்" (1 கொரிந்தியர் 14:34) மற்றும் அவர்கள் "புருஷர் மீது அதிகாரம் செலுத்தக்கூடாது" ( 1 தீமோத்தேயு 2:12) என்று கூறுகிறது.

வேதாகமத்தின் மாபெரும் கதாநாயகர்களைப் பற்றி நாம் நினைக்கின்றபோது, நமது சிந்தைகள் பெரும்பாலும், தன்னிகரற்ற மனிதர்களை நோக்கிச் செல்லுகிறது. நோவா தைரியத்தையும் கீழ்ப்படிதலையும் வெளிக்காண்பித்தார். ஆபிரகாம் விசுவாசத்திற்கு ஒரு மாபெரும் உதாரணமாக இருக்கின்றார். யோபு பொறுமையின் உதாரணத்தை உயர்த்திப்பிடித்தார். யோசேப்பு தூய்மையான வாழ்விற்கு ஒரு உதாரணமாகத் திகழ்கின்றார். காலேப்பின் தன்னம்பிக்கையான செயல்பாட்டை மிஞ்சுதல் என்பது கடினமானது, தாவீது, தேவனிடத்தில் நம்பிக்கையாய் இருப்பது பற்றி நமக்குப் போதிக்கின்றார். இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, பேதுரு இயக்கம் கொண்ட நடத்துவத்தை அளித்தார். கடினமான ஊழியப்பணிக்குப் பவுலின் உதாரணத்தை மேம் படுத்தக்கூடுவது யாரால் முடியும்?

என்னைத் தவறாகப் புரிந்துக்கொள்ள வேண்டாம்: வேதாகமத்தில் மாபெரும் பெண்களைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை என்று நான் கூறுவதில்லை. அவர்களில் ஒருசிலர், நான் மேலே குறிப்பிட்டுள்ள ஆண்களின் உதாரணங்களை மிஞ்சி நிற்பவர்களாகவும் இருக்கலாம். நான் கூறுவது என்னவென்றால், சட்டப்படி, தேவன் நடத்துதலை மேற்கொள்வதற்கு ஆண்களைத் தேர்ந்துகொண்டார். ஊழியத்தின் சோதனைகள் மற்றும் பயன்பாடு நிறைந்த தன்மை ஆகியவற்றில் ஆண்கள் சுடர்விட வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்; ஆண்கள், என்ன செய்யப்படவேண்டும் என்பதைக் கண்டு அது செய்யப்படுவதற்குப் பாடுபட வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்.

மனைவிகள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிருந்திருக்க வேண்டியது ஏன் என்பதற்கான தமது காரணங்களைத் தருவதில் பவுல், "என்னத்தினாலெனில், முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான், பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள்" என்று கூறினார் (1 தீமோத்தேயு 2:13). மேலும் அவர், "புருஷன் ஸ்திரீக்காக சிருஷ்டிக்கப்பட்டவனல்ல, ஸ்திரீயே புருஷனுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டவள்" என்றும் எழுதினார் (1 கொரிந்தியர் 11:9).

வசனரீதியாகவும் இயல்பாகவும், ஆணே நடத்துவத்தை மேற்கொள்ள வேண்டும் என்று வேதாகமம் போதிக்கிறது; அவ்வாறு செய்ய அவன் தவறுதல் என்பது தவறானதாக, வசனரீதியற்றதாக மற்றும் இயல்புக்கு மாறானதாக இருக்கும். தேவனுடைய ஏற்பாடு அவ்விதமாக இருப்பது ஏன் என்று நான் அறியவில்லை. "யாரேனும் ஒருவர் ஒரு காரியத்தைச் செய்யட்டும் என்று அனுமதிப்பது" ஆணின் இயல்பாக இருப்பதால் தேவன் இந்த அறிவுறுத்தலைக் கொடுத்தாரா என்று நான் வியப்பதுண்டு. (ஆண்களும் பெண்களும் உறுப்பினர்களாக உள்ள ஆராதனை

ஒருங்கமைப்புப் பணிகளில், ஆண்கள் பெரும்பாலும் நடத்துவத்தை மேற்கொள்ளும்படி - மற்றும் பெரும்பாலான பணிகளை, செய்யும்படி - பெண்களை அனுமதிப்பதைக் கண்டுள்ளேன்.) தேவனுடைய காரணங்கள் எதுவாக இருப்பினும், சபையிலும் குடும்பங்களிலும், ஆண்களே ஆவிக்குரிய நடத்துநர்களாக இருக்க வேண்டும் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது.

இந்த விஷயத்தில் ஆண்கள் எவ்வளவு அடிக்கடி தவறுகின்றனர்![6] சபைக்கு வருதல் பற்றிய விஷயத்தைச் சிந்தித்துப்பாருங்கள்: ஆண்கள் காரை ஓட்டி வந்து தங்கள் மனைவிகளையும் பிள்ளைகளையும் சபைகூடுமிடத்தின் வாயிற்படியில் இறக்கிவிட்டு, இன்னொரு ஞாயிற்றுக் கிழமையை தேவனற்ற வகையில் செலவிடுவதற்காகத் தாங்கள் வந்த காரிலேயே திரும்பிச் சென்றுவிடும் ஆண்களை நான் கண்டிருக்கின்றேன்.

டெக்சாஸ் மாகாணத்தின் கார்ப்பஸ் கிறிஸ்டி என்ற இடத்தில் வெளியாகும் செய்தித்தாள் ஒன்றில் பின்வரும் தலைப்புச் செய்தி வெளியாயிற்று: ‘‘தாயார் சபையில், தந்தை மயக்கத்தில், பிள்ளை மரணத்தில்.’’ இந்த செய்தியானது, தாயானவள் சபை ஆராதனையில் கலந்து கொள்ளச்சென்றபோது, வீட்டில் தந்தையோடு இருக்கும்படி விடப்பட்ட ஒரு சிறுபிள்ளையின் மரணத்தைப் பற்றி எடுத்துரைத்தது. பிள்ளையைக் கவனித்துக்கொள்வதற்குப் பதிலாகத் தந்தை தூக்க மயக்கத்தில் இருந்தார், அந்தச் சிறுபையன் அருகில் இருந்த ஒரு சிறு தண்ணீர்க்குட்டைக்குச் சென்று அதில் மூழ்கிப்போனான். ஆவிக்குரிய மட்டத்தில் இந்தக் கதையானது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலைவேளையிலும் ஆயிரக்கணக்கான குடும்பங்களில் திரும்பத்திரும்ப நிகழ்கிறது என்பது இன்னும் பெரிய துன்பநிலையாக உள்ளது. தாயார் சபையில் இருக்கையில், தந்தையார் மயக்கத்தில் இருக்கின்றார், பிள்ளைகள் ஆவிக்குரிய நிலையில் மரித்திருக்கின்றனர் - ஏனென்றால் தாய்மார்கள் மட்டும் தனியே தங்கள் பிள்ளைகளுக்குப் பயிற்றுவிக்க முடியாது.

போதிக்கின்ற மற்றும் பயிற்றுவிக்கின்ற குடும்பம் பற்றிய விஷயத்தை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்: இந்தப் பொறுப்பை வேதாகமம் தந்தையின் தோள்களின்மீதே முற்றிலும் சுமத்துகிறது என்று நாம் முன்னதாகவே குறிப்பிட்டோம் (எபேசியர் 6:4). இவ்வாறு இருந்தபோதிலும், சில பிள்ளைகள் தங்களின் பெயர்களை அவர்களின் தந்தையர்களின் ஜெபத்தின்போது அவர்களின் உதடுகளில் இருந்து உச்சரிக்கப்படுவதை ஒருபோதும் கேட்டதில்லை.

கர்த்தருக்கென்று ஊழியம் செய்தல் பற்றிய விஷயம் என்ன? பெண்கள் பலவிதப் பொறுப்புகளை சுமக்கின்றனர். சில சபைக்குழுமங் களில், பெண்கள் வீடுசந்திப்பிற்குச் செல்லவில்லையென்றால், மற்ற வர்களுக்கு உதவவில்லையென்றால், இழந்துபோனவர்களை மீட்கும் முயற்சியில் ஈடுபடவில்லையென்றால் அந்த அத்தியாவசியமான பணிகள் செய்யப்படாமலே விடப்பட்டிருக்கும்.

‘‘பெண்களின் விடுதலை இயக்கம்’’ பற்றிச் சலிப்படைந்த ஆண் நண்பர்கள் சிலர் எனக்குண்டு. அவர்கள், ‘‘பெண்கள்

மேற்கொள்ளுதல்'' பற்றி முறையிடுகின்றனர். அதேவேளையில், எவரொருவரும் காணமுடிகின்றபடி, அவர்கள் எந்த ஒரு விஷயத்திலும் ஒருக்காலும் நடத்திச்செல்லுதலை மேற்கொள்ளுவதில்லை. ஆம், சில ஆண்கள் தாங்கள் கூறுகின்ற யாவற்றின்படியேயும் மிகச்சரியாகப் பெண்கள் செய்யவேண்டும் என்று விரும்புவார்கள், ஆனால் அவர்கள் ஆணாக இருப்பதால் தேவன் அவர்களுக்குத் தந்த பொறுப்புகளை ஒருக்காலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

"ரோமாபுரி வீழ்ந்தது ஏன்?" என்ற சிந்தனையைத் தூண்டும் தலைப்பில் கட்டுரையொன்று சில காலத்திற்கு முன்பு ஆக்லஹாமா நகரில் இருந்து வெளியாகும், "ஆக்லஹாமியர்களும் காலங்களும்" என்ற செய்தித்தாளில் வெளியாயிற்று. அந்தக் கட்டுரையில் காணப்பட்ட சிலபகுதிகள் பின்வருமாறு:[7]

> பிலதெல்பியாவின் புகழ்பெற்ற மனநல மருத்துவரான முனைவர் மவுரிஸ் E. லின்டன், அமெரிக்காவில் "ஆண்களுக்கு ஆண் தலைமைத் துவத்தை மீளக்கட்டுவித்தல்" என்பதற்கு அழைக்கப்பட்டார்.
>
> அவர், ஒரு செய்தியாளர்களின் கூட்டத்தில் பழங்கால ரோமாபுரியைப் போன்றே அமெரிக்காவும், "வளமைக்கு இன்பமே இணக்கமானது" என்ற கொள்கையின்கீழ்ச் சென்றுகொண்டுள்ளது என்று கூறினார்.
>
> ரோமாபுரியின் வளமையானது பெண்களின் பணிப்பொறுப்பில் ஒரு மாற்றத்திற்கு வழிநடத்திற்று என்று அவர் கூறினார். அவர்கள் ஆண்களின் செலவில் வல்லமை நிறைந்தவர்களாகவும் முரட்டுத்தனம் உள்ளவர்களாகவும் ஆயினர் ... இதை அவர் ரோமாபுரியின் வீழ்ச்சியினுடைய தொடக்கம் என்று அழைத்தார்.

முனைவர் லின்டன் கூறினது சரியானதுதான் என்று நான் நினைக்கிறேன். நம்மில் மிகப்பலர் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளாமலேயே ஆண்களாய் இருக்கும் சிலாக்கியங்களை விரும்புகின்றோம். ஒவ்வொரு தந்தையும் தனது குடும்பத்தின் ஆவிக்குரிய வளர்ச்சியில் நடத்துநராய் இருக்கும் சரியான இடத்தை மேற்கொள்ளத் தேவன் நமக்கு உதவுவாராக.

## முடிவுரை

தேவனுடைய மனிதர்களுக்குத் தேவையான பண்புகளின் பட்டியலை நாம் முழுவதுமாகக் கூறி முடிக்கவில்லை. "மிகவும் தேவைப்படுகிற பத்துவகை மனிதர்கள்" என்ற தலைப்பில் பட்டியல் ஒன்றை யாரோ ஒருவர்[8] தொகுத்துக் கொடுத்துள்ளார்:

1. மற்ற எந்தப் பணியைக் காட்டிலும் தேவனுடைய பணியை மேலானதாக வைக்கும் மனிதர்.

2. தனது பிள்ளைகளை ஆராதனைக்கு அனுப்புவதற்குப் பதிலாக, அழைத்து வரும் மனிதர்.

3. தான் சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் சரியான வகையிலான உதாரணமாக இருக்கும் மனிதர்.

*4. ஞாயிற்றுக்கிழமைக் காலைத் தூக்கத்தைவிட அதிகமாகத் தமது வேதாகம வகுப்பைப் பற்றி நினைக்கும் மனிதர்.*

*5. தனது சட்டைப் பையில் இருக்கின்றவற்றை கொடுப்பதாக இன்றி தான் எப்படி செழிப்படைந்திருக்கிறேன் என்பதை நினைத்துக் கொடுப்பதை அளக்கும் மனிதர்.*

*6. தமக்காகவோ அல்லது வேறு எவருக்காகவோ இன்றி கிறிஸ்துவுக்காகவே ஆராதனைக்குச் செல்லுகின்ற மனிதர்.*

*7. உதவப்படுவதற்கு மாறாக உதவுவதில் ஆழ்ந்த விருப்பம் கொண்டுள்ள மனிதர்.*

*8. மற்றவர்களின் தவறுகளைக் காண்பதற்கு முன்பு தமது தவறுகளைக் காணும் மனிதர்.*

*9. புத்திக்கூர்மையுள்ள சிந்தைக்கு மாறாக மனவிருப்பமுள்ள சிந்தையைக் கொண்ட மனிதர்.*

*10. உலகப்பிரகாரமான கனத்தைக் காட்டிலும் கிறிஸ்துவுக்கென்று ஆத்தும ஆதாயம் செய்தல் பற்றி அதிக அக்கறை செலுத்தும் மனிதர்.*

*“நாம் புருஷர்களாய் இருப்போமாக” என்பதே நான் முன்வைக்கும் அறைகூவலாக உள்ளது. தாவீது தன் மகன் சாலொமோனுக்குக் கடைசி அறிவுரையைக் கூறியபோது, “நீ திடன்கொண்டு புருஷனாயிரு” என்று கூறினார் (1 இராஜாக்கள் 2:2ஆ). 1 கொரிந்தியர் 16:13 பின்வரும் புத்தி மதியைக் கொடுக்கிறது: “விழித்திருங்கள், விசுவாசத்தில் நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்.”*

*நம்மில் உள்ள புருஷர், புருஷர்களாக நடந்துகொள்ள - கிறிஸ்வர்கள் ஆவதில் நடத்துவத்தை மேற்கொள்ள - தேவன் உதவுவாராக. நமது வீட்டார்கள் கர்த்தரிடம் நெருங்கி வருவதற்கு நாம் நடத்துவத்தை மேற்கொள்வோமாக. நன்மையான மற்றும் சரியான யாவற்றிலும் நாம் நடத்துவத்தை மேற்கொள்வோமாக.*[9]

---

குறிப்புகள்

[1]*எரெமியா 5:1ல் இதைப்போன்றதொரு வசனப்பகுதி காணப்படுகிறது.* [2]*இந்தப் பாடல் உண்மையில், “என் வாழ்வை எடுத்துக்கொள்ளும், ஆண்டவரே, அது உமக்கென்று பரிசுத்தமாக்கப்படட்டும் ...” என்று கூறுகிறது.* Frances M. Havergal, “Take My Life, and Let It Be.” [3]*பிளேட்டோ என்பவர் பழங்காலக் கிரேக்கத் தத்துவஞானியாவார்.* [4]Plato, quoted in Herbert V. Prochnow and Herbert V. Prochnow, Jr., *A Dictionary of Wit, Wisdom, and Satire* (New York: Popular Library, 1962), 172. [5]*சில பெற்றோர்கள், பகுத்தாய்ந்து, “ஓ, நான் அந்தக் காரணங்களுக்காக இரவும் பகலும் எல்லா நேரங்களிலும் உழைப்பது இல்லை. எனது பிள்ளைகள் என்னைக் காட்டிலும் மேன்மையான வாழ்வைப் பெற்றிருக்க வேண்டும் என்பதற்காகவே நான் இவ்வாறு உழைக்கின்றேன்” என்று கூறுகின்றனர். முடிவு விளைவு என்பது ஒன்றாகவே உள்ளது: அவர்கள் தங்களின் பிள்ளைகளைப் புறக்கணிக்கின்றனர்.* [6]*நான் கொடுத்துள்ள உதாரணங்கள், உலகில் நான் வாழும் பகுதியில், சிலவேளைகளின் ஆண்கள் நடத்துவத்தை மேற்கொள்ளத் தவறும் வழிமுறைகளாக உள்ளன.*

*உலகில் நீங்கள் வாழும் பகுதியில், பரவலாக காணப்படும் உதாரணங்களை நீங்கள் இவ்விடத்தில் தரவேண்டும். [7]சட்டப்படி, இன்றைக்கான சத்தியம் வெளியீடுகளில் அமெரிக்காவிற்கென்றே தனிப்பட்ட வகையில் உள்ள விவரிப்புகளைத் தவிர்க்கவே நாங்கள் முயற்சி செய்கின்றோம். இருப்பினும், ஆண்கள் நடத்துவத்தில் குறைவுபடுதல் என்பது அமெரிக்காவுடன் மட்டுப்படுத்தப்படுவதில்லை என்பதே எனது கருத்தாக உள்ளது. இந்தச் செய்தித்தாளின் கட்டுரையில் வெளியான கூற்றுகள் உலகம் முழுவதிலும் உள்ள மற்ற பல்வேறு சமுதாயங்களுக்கும் நடைமுறைப்படுத்தப்படக்கூடும். [8]இந்தப் பட்டியலின் தலைப்பு, சட்டத்தை அமுல்படுத்தும் முகமைகள் சிலவேளைகளில், “மிகவும் தேடப்படும் பத்து குற்றவாளிகள்” என்ற தலைப்பில் வெளியிடும் பட்டியலின் தன்மையில் இருந்து பெறப்பட்டுள்ளது. ஆவிக்குரியவகையில் “மிகவும் தேடப்படும் பத்துகுற்றவாளிகள்” என்ற பட்டியல் பல ஆண்டுகளுக்கு முன்பு, “பெயர் அறியப்படாதவர் எழுதியது” என்ற தலைப்பின்கீழ் சபை அறிவிப்பு ஒன்றில் வெளியிடப்பட்டது. [9]ஞானஸ்நானம் பெறுவதற்கான அழைப்புடனோ அல்லது கிறிஸ்தவ ஊழியத்திற்கு உண்மையுள்ளவர்களாக மீளக்கட்டுவிக்கப்படுதலுக்கான அழைப்புடனோ நீங்கள் உங்கள் பிரசங்கத்தை முடித்தால், முதலில் கூட்டத்தில் உள்ள எல்லா ஆண்களும் தேவையான வழிகளில் எல்லாம் கர்த்தருக்குப் பதில் செயல் செய்யும்படிக்கு அவர்களை ஊக்கப்படுத்துங்கள். பின்பு நீங்கள் அங்குள்ள மற்ற யாவரையும் உள்ளடக்கும்படி உங்கள் அழைப்பை விரிவாக்குங்கள். [10]*Josiah Gilbert Holland, “God, Give Us Men!” *The Best Loved Poems of the American People* (Garden City, N.Y.: Garden City Books, 1936), 132.




*இதை ஒரு நிழற்படம் காட்டும் கருவியின் உதவியைக் கொண்டும் விளக்கலாம்*